தினமலர்
நிறுவனர் : டி.வி. ராமசுப்பையர்

# வேல்ஸ் பல்கலை 10வது பட்டமளிப்பு விழா

பல்லாவரம், நவ. 10–

பல்லாவரம் வேல்ஸ் பல்கலையின், 10வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. இதில், 2,800 மாணவர்கள், இணைய வழியில் பட்டங்களை பெற்றனர்.




பல்லாவரம், வேல்ஸ் பல்கலையின், 10வது பட்டமளிப்பு விழா, நேற்று நடந்தது. இதில் இடமிருந்து: வேல்ஸ் பல்கலை குழும துணை தலைவர் டாக்டர் ஆர்த்தி கணேஷ், இணைவேந்தர் ஜோதி முருகன், பல்கலை வேந்தர் ஐசரி கே.கணேஷ், தேசிய தரமதிப்பீட்டுக் குழுவின் செயல் தலைவர் பேராசிரியர் டாக்டர் வீரேந்திர் சிங் சவுகான், முன்னாள் யு.ஜி.சி., துணைத் தலைவர் பேராசிரியர் தேவராஜன் மற்றும் வேல்ஸ் பல்கலை துணை தலைவர் ப்ரீத்தா கணேஷ்.

பல்லாவரம் வேல்ஸ் பல்கலையின், 10வது பட்டமளிப்பு விழா, நேற்று நடந்தது. நிகழ்ச்சியில், பல்கலை வேந்தர் டாக்டர் ஐசரி கே.கணேஷ் தலைமை தாங்கினார்.

சிறப்பு விருந்தினராக, புதுடில்லி தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் செயல் தலைவர் பேராசிரியர் டாக்டர் வீரேந்திர் சிங் சவுகான் பங்கேற்று, மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கினார்.

பின், அவர் பேசியதாவது:

கல்வி என்பது பட்டம் பெறுவதற்கு மட்டுமல்ல. அதனால், நாம் சார்ந்த சமுதாயத்தையும், நாட்டையும், உயர்த்தவும், வாழ்நாள் முழுதும் நல்வழிகள் கடைப்பிடிக்கவும் பயன்படுத்த வேண்டும்.

கொரோனா தொற்று உலகத்தை விட்டு செல்வதற்கு, தடுப்பு மருந்துகள் தயாரித்து, ஏற்றுமதி செய்வதில், இந்தியாவின், 'சைரோஸ் பூனாவாலா' நிறுவனம், உலகத்திலேயே முதல் இடத்தில் உள்ளது.

உலகம் பல போர்களையும், பல நோய் கால நெருக்கடிகளையும் சமாளித்து வந்திருக்கிறது. அதனால், கொரானாவும் விரைவில் உலகை விட்டு செல்லும்.

இவ்வாறு, அவர் பேசினார்.

நிகழ்ச்சியில், தங்கப் பதக்கம் மற்றும் முனைவர் பட்டங்களை, சமூக இடைவெளியை கடைப்பிடித்து, மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. மேலும், கொரோனா பரவலை கருத்தில் வைத்து, 2,800 மாணவர்களுக்கு, இணையவழியில் பட்டம் வழங்கப்பட்டது.

வேல்ஸ் பல்கலை இணை வேந்தர் ஜோதி முருகன், வேல்ஸ் குழும துணை தலைவர் ஆர்த்தி கணேஷ், பல்கலை துணை தலைவர் ப்ரீத்தா கணேஷ், துணைவேந்தர் ஸ்ரீமன் நாராயணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**10.11.2020 – TUE.** **(Chennai) Pg.No. 1**